
வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 Reg. No. : P. 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

Email : eelanaduweekly@gmail.com மலர் : 07 24.12.2025 புதன்கிழமை இதழ் : 358 பக்கங்கள் : 08



மின்விளக்குகளால் ஒளிரும் யாழ். மணிக்கூட்டு கோபுரம்... (படம் - ஐ. சிவசாந்தன்)

-மேலும் படங்கள் பக்கம் 2இல்

# மாகாண தேர்தலை உடன் நடத்த அரசாங்கத்தை வலியுறுத்துங்கள்

## ஜெய்சங்கரிடம் தமிழ் கட்சிகளின் தலைவர்கள் கூட்டாகக் கோரிக்கை

கொழும்பு, டிசெம்பர் 24

மாகாண சபைகள் தேர்தலை விரைந்து நடத்துமாறு அரசாங்கத்தை இந்தியா வலியுறுத்த வேண்டும் என்று தமிழ்த் தேசிய கட்சிகளின் தலைவர்கள் கூட்டாக இந்திய வெளிவிவகார அமைச்சர் சு. ஜெய்சங்கரிடம் நேற்று கோரிக்கை விடுத்தனர்.

நாட்டுக்கு வருகை தந்துள்ள இந்திய வெளிவிவகார அமைச்சர் சுப்பிரமணியம் ஜெய்சங்கரை கொழும்பில் தமிழ்த் தேசிய கட்சிகள் கூட்டாக சந்தித்தன. சுமார் 45 நிமிடங்கள் இந்த சந்திப்பு

07



# பேரிடர் பாதிப்பிலிருந்து மீள இலங்கைக்கு 45 கோடி டொலர்

## கொழும்பில் அறிவித்தார் ஜெய்சங்கர்

கொழும்பு, டிசெ. 24

"டித்வா சூறாவளியால் இலங்கையில் ஏற்பட்ட பெரும் சேதங்களை கருத்தில் கொண்டு 45 கோடி அமெரிக்க டொலர் - நம் நாட்டு மதிப்பில் சுமார் 13 ஆயிரத்து 925 கோடி ரூபாய் மதிப்பிலான மீள் கட்டுமான உதவித் தொகுப்பை வழங்க உறுதியளித்துள்ளது" என்று இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் சிறப்பு தூதராக இலங்கை வந்துள்ள இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் ஜெய்சங்கர்,

07

# ரயில் மோதி குடும்பஸ்தர் உயிரிழப்பு!

பு.கஜிந்தன், சி.தில்லைநாதன்

தென்மராட்சி, டிசெ. 24

புகையிரத பாதையை கடக்க முயன்றவரை ரயில் மோதியதில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்தார்.

கிளிநொச்சி

07

# யாழ். மணிக்கூட்டு கோபுரம் மின்விளக்குகளால் அலங்கரிப்பு



யாழ்ப்பாணம், டிசெ. 24

யாழ். மாநகர மணிக்கூட்டு கோபுரம் மின்விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டு நேற்றைய தினம் திறந்து வைக்கப்பட்டது.

டான் தொலைக்காட்சி குழுமம் புதுவருடத்தை வரவேற்கும் முகமாக வருடாந்தம் இந்தப் பணியை முன்னெடுத்து வருகிறது.

நேற்று செவ்வாய்க்கிழமை மாலை இடம்பெற்ற இந்த நிகழ்வில் வடக்கு ஆளுநர் நா. வேதநாயகன், யாழ். மாவட்ட அரச அதிபர் ம. பிரதீபன், யாழ். மாநகர சபை முதல்வர் மதிவதனி விவேகானந்தராஜா, யாழ். மாவட்ட

07

# மாணவன் உட்பட 10 பேர் போதைப்பொருளுடன் கைது

யாழ்ப்பாணம், டிசெ. 24

யாழ்ப்பாணம் நகரில் நடத்தப்பட்ட திடீர் சோதனையில் பாடசாலை மாணவன் உட்பட 10 பேர் போதைப் பொருட்களுடன் கைது செய்யப்பட்டனர்.

யாழ்ப்பாணம் தலைமையக பொலிஸார் நேற்று செவ்வாய்க்கிழமை காலை இந்த விசேட நடவடிக்கையை மேற்கொண்டிருந்தனர்.

இதன்போது, ஐஸ் போதைப் பொருளுடன் 4 பேரும் போதை மாத்திரைகளுடன் 5 பேரும் கேரள கஞ்சாவுடன் ஒருவரும் கைதுசெய்யப்பட்டனர். இவ்வாறு கைதானவர்களில் ஒருவர் 17 வயதான

07

# இலங்கை மீளெழுவதற்கு தோளோடு தோள்நிற்போம்

## ஜனாதிபதிக்கு இந்திய பிரதமர் கடிதம்

கொழும்பு, டிசெ. 24

"இலங்கை மக்களின் வாழ்க்கையை மீண்டும் கட்டியெழுப்புவதிலும் அவர்களின் தாங்கிக் கொள்ளும் சக்தியை உறுதிப்படுத்துவதில் கடந்த காலத்தைப் போன்றே நாங்கள் உங்களுடன் தோளோடு தோள் நிற்போம்", இவ்வாறு குறிப்பிட்டு இந்திய பிரதமர் நரேந்திர மோடி ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கவுக்கு கடிதம் அனுப்பியுள்ளார்.

07



மெய்நிகர்வழியில் கிளிநொச்சி தற்காலிக பாலத்தை நேற்று ஜனாதிபதி, இந்திய வெளிவிகார அமைச்சர், வெளிவிவகார அமைச்சர் ஆகியோர் திறந்துவைத்தபோது...

# ஒவ்வாமையால் பாதிக்கப்பட்ட சிறுமியின் இறப்பில் சந்தேகம்!

முல்லைத்தீவு, டிசெ. 24

உணவு ஒவ்வாமையால் முல்லைத்தீவு மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட 12 வயது சிறுமி உயிரிழந்தார். எனினும், சிறுமியின் மரணத்தில் சந்தேகம் நிலவுவதாக அவரின் உறவினர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

இந்தச் சம்பவத்தில் முல்லைத்தீவு - சிலாவத்தையை சேர்ந்த குகநேசன் டினோஜா என்பவரே உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும்

07

# வடக்குக்கு தேவையான நிதியை அமைச்சுகளிடமும் பெற வாய்ப்பு

## வடக்கு ஆளுநர் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், டிசெ. 24

வடக்கு மாகாணத்தின் தேவைகள் அதிகரித்து வரும் நிலையில் வழமையான மாகாண நிதி ஒதுக்கீடுகளுக்கு அப்பால், மத்திய அரசாங்கத்தின் நிரல் அமைச்சுகளிடமிருந்தும் நிதியைப் பெறுவதற்கான வாய்ப்புகள் உள்ளன. எனவே, அதற்கேற்ற வகையில் இப்போதே திட்டங்களைத் தயாரிக்குமாறு வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

வடக்கு மாகாணத்தின் நிதியும்

07

உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அலங்கரிக்கப்பட்ட யாழ் நகர மணிக்கூட்டு கோபுர திறப்பு விழா...



யாழ்ப்பாணம் நகரின் மணிக்கூட்டு கோபுரம் டான் தொலைக்காட்சி குழுமத்தால் மின்விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டு நேற்றைய தினம் திறந்து வைக்கப்பட்டது. டான் தொலைக்காட்சி குழுமம் புதுவருடத்தை வரவேற்க வருடாந்தம் முன்னெடுக்கும் இந்த நிகழ்வில் பங்கேற்ற விருந்தினர்கள் மங்கல விளக்கேற்றியபோது...

(படங்கள் - ஐ. சிவசாந்தன்)

## வலி. வடக்கு தவிசாளர்மீது ஒழுக்காற்று நடவடிக்கை!

### வடக்கு ஆளுநரிடம் முறைப்பாடு

யாழ்ப்பாணம், டிசெ. 24

வலி. வடக்கு பிரதேச சபையின் தவிசாளர் சோ. சுகிர்தன்மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வடக்கு மாகாண ஆளுநரிடம் எழுத்துமூல முறைப்பாடு அளிக்கப்பட்டுள்ளது.

வலி. வடக்கு பிரதேச சபையின் தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினரான கோகுலன் சுரேகா என்பவரே நேற்றைய தினம் இந்த முறைப்பாட்டை ஆளுநர் செயலகத்தில் செய்துள்ளார்.

சில பிழைகளை சுட்டிக்காட்டியபோது தவிசாளர் தன்னை அவதூறாக பேசினார். அத்துடன், தலைக்கவசத்தால் தாக்க முற்பட்டார் என்று அவர் தனது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

இதேநேரம், இந்தச் சம்பவம் தொடர்பில் தெல்லிப்பழை பொலிஸ் நிலையத்திலும் நேற்றுமுன்தினம் முறைப்பாடு செய்யப்பட்டதாகவும் சுரேகா தெரிவித்துள்ளார். (ஐ-03)

## சண்டிலிப்பாய் அபிவிருத்தி குழு கூட்டத்தில் கதிரையால் குழப்பம்

யாழ்ப்பாணம், டிசெ. 24

சண்டிலிப்பாய் ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் வலி. தென்மேற்கு பிரதேச சபை தவிசாளருக்கு ஒதுக்கப்பட்ட கதிரையால் குழப்பம் ஏற்பட்டது.

சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தின் அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் ஒருங்கிணைப்பு குழுவின் தலைவர் சிறீ பவானந்தராஜா தலைமையில் ஆரம்பமானது.

கூட்டத்துக்கு தம்மை அனுமதிக்கவில்லை என்று வலி. தென்மேற்கு பிரதேச சபையின் உறுப்பினர்கள் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இந்த நிலையில், வலி. தென்மேற்கு பிரதேச சபையின் தவிசாளர் ஜெசீதனுக்கு மண்டபத்தின் முன்பக்கத்தில் வலது புறமாக ஆசனம் ஒதுக்கப்பட்டது.

இதன்போது அந்த ஆசனத்தில் அமர்வதால் தன்னால் கூட்டத்தை தலைமை தாங்குபவரின் முகத்தை சரியாக பார்க்க முடியாது உள்ளமு என்றும் ஆசனத்தை மாற்றுமாறும் கோரிக்கை விடுத்தார்.

இதையடுத்து, அவருக்கு பிரதேச செயலருக்கு அருகாமையில் ஆசனம் வழங்கப்பட்டது. இந்நிலையில், அந்த ஆசனத்தில் அவரை அமர வைக்க முடியாது. மேடைக்கு முன்பாக ஆசனம் ஒதுக்கவேண்டும் என்று பாராளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அருச்சுனா கூறினார்.

இதன்போது அங்கே குழப்ப நிலை ஏற்பட்டது. பின்னர், தவிசாளருக்கு மேடைக்கு முன்பாக ஆசனம் வழங்கப்பட்ட நிலையில் கூட்டம் நடைபெற்று வருகிறது. (ஐ-05)

## மன்னாரில் உணவு கையாளும் நிலையங்களில் சோதனைகள்

மன்னார், டிசெ. 24

மன்னார் பொது சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள உணவகங்கள், சிற்றுண்டிசாலைகள், வீதியோர உணவகங்கள்மீது மன்னார் பொது சுகாதார பரிசோதகர்கள் ஆய்வு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

பண்டிகைக் காலத்தை முன்னிட்டு, அதிகளவான சுகாதாரமற்ற உணவுகள் மற்றும் சிற்றுண்டிகள் விற்பனை செய்யப்படுகின்றன என்று கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளுக்கு அமைவாகவே இந்த ஆய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மன்னார் நகர சபை பகுதியில், பண்டிகைக்கால நடைபாதை வியாபார நிலையங்களில் அமைக்கப்பட்டுள்ள சிற்றுண்டி, ஐஸ்கிறீம் விற்பனை நிலையங்களிலும் சுகாதாரத்துறையினர் சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதனிடையே, நகர பகுதியில், சுகாதாரமற்ற முறையில் உணவுகளை தயாரித்தமை,

உணவு தயாரிக்கும் பகுதியை அசுத்தமாக வைத்திருந்தமை, சூடான உணவுகளை சுகாதார விதிமுறைகளை மீறி பிளாஸ்ரிக் வாளியில் களஞ்சியப்படுத்திமை போன்றவற்றுக்காக உணவகம் ஒன்றின்மீது சட்ட நடவடிக்கையும் எடுக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## புத்தூர் நீரேரியில் மீன்பிடித்த இளைஞர் சேற்றில் மூழ்கி பலி

யாழ்ப்பாணம், டிசெ. 24

புத்தூர் கடல்நீரேரியில் மீன்பிடித்த இளைஞர் சேற்றில் புதையுண்டு உயிரிழந்தார்.

இதில், புத்தூர் - ஆவரங்காலை சேர்ந்த கமலநாதன் சாருஜன் (வயது 25) என்ற இளைஞனே உயிரிழந்தார்.

குறித்த இளைஞர் நேற்று முன்தினம் மீன்பிடித்துக் கொண்டிருந்தார். அப்போது, சேற்றில் புதையுண்டு காணாமல் போனார். இதனை அவதானித்தவர்கள் கடல்நீரேரியில் இறங்கி இளைஞரை தேடினர். நீண்டநேர தேடுதலின் பின்னர், இளைஞரின் சடலமே மீட்கப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பில் அச்சுவேலி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ஐ-02-08)

## மருதங்கேணி பொலிஸ் நிலையத்தின் புதிய பொறுப்பதிகாரி கடமையேற்றார்




வடமராட்சி, டிசெ. 24

மருதங்கேணி பொலிஸ் நிலையத்தின் புதிய பொறுப்பதிகாரியாக கெலும் பண்டார பொறுப்பேற்றுள்ளார்.

நேற்று முன்தினம் திங்கட்கிழமை அவர் தனது தனது கடமைகளை பொறுப்பேற்றிருந்தார்.

நீண்டநாட்களாக மருதங்கேணி பொலிஸ் நிலையத்துக்கு நிரந்தர பொறுப்பதிகாரி ஒருவர் இல்லாத நிலையில் புதிய பொறுப்பதிகாரி நியமிக்கப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-02-08)

## குடத்தனை கிராம மக்களால் குமுழமுனைக்கு உலருணவு



வடமராட்சி, டிசெ. 24

டித்வா புயல் தாக்கத்தால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு மக்களுக்கு குடத்தனை மக்களால் உலருணவு பொதிகள் வழங்கப்பட்டன.

குடத்தனை வடக்கை சேர்ந்த மக்களும் புலம்பெயர் மக்களும் இணைந்து சேகரித்த நிதி மூலம் இந்த உலருணவு பொதிகள் நேற்றைய தினம் வழங்கி வைக்கப்பட்டன.

முல்லைத்தீவு - குமுழமுனை கிழக்கின் கிராம உத்தியோகத்தரின் தெரிவின் அடிப்படையில் 100 குடும்பங்களுக்கு 5 இலட்சம் ரூபாய் பெறுமதியில் உலருணவு பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் குடத்தனை கிராமத்தின் பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், குமுழமுனை கிழக்கு கிராம உத்தியோகத்தர் எனப் பலர் கலந்து கொண்டனர். (ஐ-02-08)

## ஐஸ் போதைப்பொருளுடன் நல்லூரில் இளைஞர் கைது

யாழ்ப்பாணம், டிசெ. 24

ஐஸ் போதைப்பொருளுடன் நல்லூரில் இளைஞர் ஒருவர் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

நல்லூர் மூத்த விநாயகர் கோவிலடியை சேர்ந்த இளைஞரே இவ்வாறு கைது செய்யப்பட்டார். அவரிடமிருந்து 2 கிராம் 120 மில்லி கிராம் ஐஸ் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டதாக யாழ்ப்பாணம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைதான இளைஞரை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரிக்கப்படுகிறார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

## ஆறுமுக நாவலர் குருபூசை விழா

யாழ்ப்பாணம், டிசெ. 24

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களமும் இந்து ஆன்மீக பிரசாரகர் சங்கமும் இணைந்து நடத்தும் சிறீலசிறீ ஆறுமுகநாவலர் குருபூசை விழா

நல்லை திருஞான சம்பந்தர் கலா மண்டபத்தில் எதிர்வரும் 27ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

இணுவில் காயத்திரி பீடத் தலைவர் சிவசிறீ மகாதேவ சோமசுந்தர குருக்கள் திருமுன்னிலை வகிக்கக் கோப்பாய் தேசிய கல்வியியற் கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி பா. தனபாலன் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெறும்.

இதில், யாழ்ப்பாண பல்கலைக்கழக இந்துக் கற்கைகள் பீட இந்து நாகரிகத்துறைத் தலைவர் பேராசிரியர் திருமதி விக்னேஸ்வரி பவநேசன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

நாவலர் கலாசார மண்டபத்தில் நாவலர் பெருமானுக்கு விசேட பூசை வழிபாடுகள் நடைபெற்று நாவலர் பெருமானின் திருவுருப்படம் ஊர்வலமாக நல்லை ஆதீன கலா மண்டபத்துக்கு எடுத்து வரப்படும். தொடர்ந்து, மங்கல விளக்கேற்றலுடன் கலை நிகழ்வுகள், சொற்பொழிவு என்பன நடைபெறும். அத்துடன், குருபூசையை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பரிசில்களும் வழங்கப்படும். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ஈழநாடு
24.12.2023 புதன்கிழமை
விசுவாவசு வருடம், மார்கழி 9

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

## மாகாண சபை தேர்தலில் இந்தியா

இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி எஸ். ஜெயசங்கர் நேற்றைய தினம் தமிழ் கட்சிகளின் பிரதிநிதிகளை சந்தித்திருந்தார். வழமைக்கு மாறாக, ஒப்பீட்டடிப்படையில் சற்று அதிக நேரத்தை தமிழ் கட்சிகளுடன் செலவிட்டிருக்கிறார். இதன்போது, சந்திப்பில் பங்குகொண்ட தமிழ் கட்சிகளின் தலைவர்கள் ஏகமனதாக மாகாண சபைகள் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்னும் விடயத்தை அழுத்தம் திருத்தமாக குறிப்பிட்டிருக்கின்றனர். புதிய அரசியல் யாப்பு ஒன்று வரும் பட்சத்தில் சமஷ்டி அடிப்படையிலான அரசியல் ஏற்பாட்டை கருத்தில் கொண்டாலும் கூட தற்போதைய சூழலில் மாகாண சபைகள் தேர்தல் நடத்தப்பட்டு வடக்கு - கிழக்கில் மக்களால் தெரிவு செய்யப்பட்ட நிர்வாகம் இருக்க வேண்டியதன் அவசியம் தொடர்பிலும் தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகள் வலியுறுத்தியிருக்கின்றனர்.

மாகாண சபைகள் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்பதில் சந்திப்பில் பங்குகொண்ட கட்சிகளின் தலைவர்கள் அனைவரும் ஒருமித்து பேசியிருக்கின்றனர். இதேவேளை, அடுத்த மாதமளவில் ஜே. வி. பி.யின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா புதுடில்லி செல்லவுள்ளதான செய்திகள் வெளிவரும் நிலையில், இந்த விடயங்களை நீங்கள் வலியுறுத்த வேண்டும் என்னும் செய்தியையும் தமிழ்க் கட்சிகளின் தலைவர் ஒருவர் அழுத்திக் குறிப்பிட்டிருக்கிறார்.

இந்த சந்திப்பின் மூலம், மாகாண சபைகள் தேர்தலில் தமிழ்க் கட்சிகள் உறுதியான நிலைப்பாட்டைக் கொண்டிருக்கின்றன என்னும் செய்தி புதுடில்லிக்கு வழங்கப்பட்டிருக்கிறது. இந்த விடயங்களில் புதுடில்லி எவ்வாறான அணுகுமுறையை கடைப்பிடிக்கும் என்பதுதான் அடுத்த கட்டமாக நோக்கப்பட வேண்டிய விடயமாகும்.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் மாகாண சபைகள் தேர்தலை நடத்தும் நோக்கம் மிகவும் குறைவு. ஒரு நிர்ப்பந்தம் இருந்தாலன்றி, மாகாண சபைகள் தேர்தலை பிற்போடுவதை பற்றியும் - முடிந்தால் நடத்தாமல் விடுவதற்கான வாய்ப்புகள் தொடர்பிலுமே யோசிப்பர். இந்தியா தொடர்பான தங்களின் பழைய நிலைப்பாட்டை கைவிட்டுவிட்டதாக ரில்வின் சில்வா அண்மையில் கூறியிருந்தார் - அது உண்மையாயின், இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் விளைவான மாகாண சபை முறைமையை எதிர்க்க வேண்டியதில்லை - எதிர்ப்பதற்கான நியாயமும் இல்லை.

பழைய நிலைப்பாடுகளை கைவிட்டுவிட்டது உண்மையாயின், தமிழ் மக்களுக்கான ஒரேயோர் அதிகாரப் பகிர்வு ஏற்பாடான மாகாண சபை முறைமையை எதிர்க்க வேண்டியதில்லை. அதனையும் தாண்டி, மாகாண சபைகள் தேர்தலை நடத்தக்கூடாது என்று ஜே. வி. பி. கருதுமாயின், அவர்களின் பழைய நிலைப்பாடான தமிழ் மக்களுக்கு அதிகாரங்களை வழங்கக்கூடாது என்னும் இனவாத நிலைப்பாட்டுடன்தான் இப்போதும் இருக்கின்றனர் என்பதுதான் உண்மை.

இவ்வாறானதொரு பின்னணியில் இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் அடிப்படையிலும் இலங்கையின் சிறுபான்மை மக்கள் தொடர்பில் நேரடித் தலையீட்டைச் செய்த நாடு என்னும் வகையிலும் மாகாண சபைகள் தேர்தலை நடத்துமாறு வலியுறுத்த வேண்டிய பொறுப்பு இந்தியாவுக்கு இருக்கிறது என்று தமிழ் கட்சிகள் கருதுவது முற்றிலும் சரியானது.

# வைத்தியசாலை இயந்திரங்கள் கொள்வனவில் பெரும் மோசடி!

### கதிரியக்கத் தொழில்நுட்பவியலாளர் சங்கம் குற்றச்சாட்டு

கொழும்பு, டிசெ. 24

மேல் மாகாண சபையினால் கம்பஹா மற்றும் அவிசாவளை வைத்தியசாலைகளுக்கு மருத்துவ இயந்திரங்களைக் கொள்வனவு செய்யும் நடவடிக்கையில் பாரிய முறைகேடுகள் இடம்பெறுவதாகக் கதிரியக்கத் தொழில்நுட்பவியலாளர் சங்கத்தின் தலைவர் சானக்க தர்மவிக்ரம குற்றம் சாட்டியுள்ளார்.

குறிப்பிட்ட சில நிறுவனங்களுக்குச் சாதகமாகத் தொழில்நுட்ப விவரக் குறிப்புகளை தயாரித்து, பொதுமக்களின் வரிப்பணத்தை மோசடி செய்யச் தொழில்நுட்பக் கொள்முதல் குழு முயற்சிப்பதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்

இவ்விடயம் தொடர்பில் கருத்து வெளியிட்ட அவர்-

கம்பஹா மாவட்டப் பொது வைத்தியசாலைக்கு ஒரு மெமோகிராம் இயந்திரத்தையும், அவிசாவளை மாவட்டப் பொது வைத்தியசாலைக்கு ஒரு சி.ரி.ஸ்கான் இயந்திரத்தையும் கொள்வனவு செய்ய மேல் மாகாண சபை அவசர நடவடிக்கைகளை எடுத்துள்ளது. இதற்காகச் சுமார் 300 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த இயந்திரங்களின் தரம் மற்றும் தொழில்நுட்பத் துல்லியம் குறித்து ஆராய வேண்டிய தொழில்நுட்பக் குழுவில், தகுதியுள்ள கதிரியக்கத் தொழில்நுட்பவியலாளர்கள் எவரும் உள்வாங்கப்படவில்லை.

இக்கொள்முதல் நடவடிக்கையில் உள்ள குளறுபடிகள் காரணமாக, அக்குழுவில் இருந்த விசேட வைத்திய நிபுணர் ஒருவரும் ஏற்கனவே அதிலிருந்து விலகியுள்ளார்.

ஒரு இயந்திரத்தைக் கொள்வனவு செய்வதற்கு முன்னர் அதன் தரம் குறித்து நடுநிலையான தொழில்நுட்ப விவரங்கள் தயாரிக்கப்பட வேண்டும். ஆனால், தற்போதைய குழு தமக்கு நெருக்கமான சில நிறுவனங்களுக்கு ஒப்பந்தத்தைப் பெற்றுக் கொடுக்கும் நோக்கில், அந்த நிறுவனங்களின் இயந்திரங்களுக்குப் பொருந்தும் வகையில் விவரக் குறிப்புகளை மாற்றியமைத்துள்ளது.

இதன் மூலம் பொதுமக்களின் பாரியளவிலான பணம் மோசடிக்காரர்களால் வீணடிக்கப்படவுள்ளது. எனவே, மேல் மாகாண சபையின் இந்த அவசரக் கொள்முதல் குறித்து முறையான விசாரணை நடத்தப்பட வேண்டும் - என்றார். (அ)

# ஒரு மில்லியன் மாணவிகளுக்கு 2026 முதல் இலவச அணையாடை

கொழும்பு, டிசெ. 24

இலங்கையிலுள்ள தரம் 06க்கு மேற்பட்ட ஒரு மில்லியனுக்கும் அதிகமான பாடசாலை மாணவிகளுக்கு அணையாடைகளை வழங்கும் தேசியத் திட்டம் 2026 ஆம் ஆண்டு முதல் நாடு முழுவதும் விரிவுபடுத்தப்படும் என பிரதமர் மற்றும் கல்வி அமைச்சர் கலாநிதி ஹரிணி அமரசூரிய அறிவித்துள்ளார்.

நேற்று முன் தினம் கல்வி அமைச்சில் இடம்பெற்ற மாணவிகளின் சுகாதார நலன் குறித்த கலந்துரையாடலின் போதே இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டது.

2024 இல் கிராமப்புற, தோட்டப்பகுதி மற்றும் பின்தங்கிய பாடசாலைகளை இலக்காகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட இத்திட்டம், தற்போது நாடு முழுவதும் உள்ள அனைத்து பாடசாலைகளுக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

இந்த வேலைத்திட்டத்திற்காக அரசாங்கம் 1.44 பில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளது.

தகுதியுள்ள ஒவ்வொரு மாணவிக்கும் அணையாடைகளைக் கொள்வனவு செய்வதற்காக ஆண்டொன்றுக்கு 1,440 ரூபா பெறுமதியான வவுச்சர் வழங்கப்படும்.

இவை மாகாண கல்வி அலுவலகங்கள் ஊடாக பாடசாலைகளுக்கு விநியோகிக்கப்படும். மாணவிகளின் சுகாதாரத்தைப் பாதுகாக்கும் நோக்கில், இலங்கை தரக்கட்டளை நிறுவனத்தினால் சான்றிதழ் அளிக்கப்பட்ட நிறுவனங்களின் தயாரிப்புகளை மட்டுமே கொள்வனவு செய்ய அனுமதி வழங்கப்படும்.


கலந்துரையாடலின்போது பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய பின்வரும் விடயங்களை வலியுறுத்தினார்.

மாணவிகள் தங்களின் தேவை மற்றும் விருப்பத்திற்கு ஏற்ப தயாரிப்புகளைத் தேர்ந்தெடுக்க வாய்ப்பளிக்கப்படவேண்டும்.

புவியியல் ரீதியான ஏற்றத்தாழ்வுகளைக் கருத்திற்கொண்டு வவுச்சர் விநியோக பொறிமுறையைச் சீரமைக்கவேண்டும்.

பாடசாலைகளில் பயன்படுத்தப்பட்ட அணையாடைகளை சுற்றாடலுக்குப் பாதிப்பின்றி அகற்றும் முறைகளை ஊக்குவிக்க வேண்டும் எனவும் குறிப்பிட்டார். (அ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



டிசெம்பர் - 24 புதன்கிழமை
விசுவாவசு வருடம் - மார்கழி 09
நல்ல நேரம் : 09.00 - 10.30
ராகு காலம் : 121.30 - 01.00
திதி : பஞ்சமி




**மேடம்**
நீண்ட நாள் ஆசையில் ஒன்று நிறைவேறும். பெற்றோரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். வெளிவட்டாரத்தில் புது அனுபவம் உண்டாகும். பவியாபாரத்தை பெருக்குவீர்கள். லாபம் பெறும் நாள்.

**இடபம்**
உங்கள் போக்கில் கொஞ்சம் மாற்றம் செய்வீர்கள்.வியாபாரத்தில் புது இடத்திற்கு கடையை மாற்றுவீர்கள். உத்தியோகத்தில் உயரதிகாரி உங்களை முழுமையாக நம்புவார். சாதித்து காட்டும் நாள்.

**மிதுனம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் எந்த காரியத்தை தொட்டாலும் இரண்டு மூன்று முறை முயன்று முடிக்க வேண்டிய சூழ்நிலை உருவாகும். உத்தியோகத்தில் கவனம் செலுத்துவது நல்லது. பொறுமை தேவை.

**கடகம்**
கடினமான காரியங்களையும் எளிதாக முடிப்பீர்கள். விரும்பிய பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். வியாபாரத்தில் வரவு கணிசமாக உயரும். உத்தியோகத்தில் ஆதாய உண்டு. திறமை வெளிப்படும்.

**சிம்மம்**
கனிவாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள். உறவினர் நண்பர்கள் மத்தியில் அந்தஸ்து உயரும். அரசால் அனுகூலம் உண்டு. வழக்கில் சாதகமான தீர்ப்பு வரும். திடீர் யோகம் கிட்டும் நாள்.

**கன்னி**
குடும்ப வருமானத்தை உயர்த்த முற்படுவீர்கள். அக்கம்-பக்கம் வீட்டாரின் அன்புத் தொல்லை குறையும். நீண்ட நாள் பிரார்த்தனையை நிறைவேற்றுவீர்கள். சக ஊழியர்கள் உதவுவார்கள்.

**துலாம்**
எதிர்பார்த்தவைகளில் சில தள்ளிப் போனாலும் எதிர்பாராத ஒரு வேலை முடியும். சகோதரி உதவுவார். வியாபாரம் தழைக்கும். எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். நன்மை கிட்டும் நாள்.

**விருட்சிகம்**
துணிச்சலாக சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். உடன்பிறந்தவர்களின் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள். வியாபாரத்தில் பழைய சரக்குகள் விற்றுத் தீரும். உங்கள் கருத்துக்கு ஆதரவு பெருகும்.

**தனுசு**
கணவன்-மனைவிக்குள் இருந்த மனக்கசப்பு நீங்கும். தோற்றப் பொலிவுக் கூடும். நேர்மறை எண்ணங்கள் பிறக்கும். புது நட்பு மலரும். வியாபாரத்தில் புதிய முயற்சிகள் பலிதமாகும்.

**மகரம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் அனாவசிய பேச்சை தவிர்ப்பது நல்லது. வியாபாரத்தில் வாடிக்கையாளர்கள் கவரும்படி சலுகைகளை அறிவிப்பீர்கள். வளைந்து கொடுக்க வேண்டிய நாள்.

**கும்பம்**
கணவன்-மனைவிக்குள் இருந்த மனக்கசப்பு நீங்கும். தோற்றப் பொலிவுக் கூடும். நேர்மறை எண்ணங்கள் பிறக்கும். புது நட்பு மலரும். புதிய முயற்சிகள் பலிதமாகும். மரியாதை கூடும்.

**மீனம்**
விடாப்பிடியாக செயல்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். ஆடம்பர செலவுகளால் சேமிப்புகள் கரையும். வியாபாரத்தில் போராடி லாபம் ஈட்டுவீர்கள். உத்தியோகத்தில் தொந்தரவுகள் வந்து நீங்கும்.

# இணுவிலில் யோகக்கலை பயிற்சி வகுப்பு





யாழ்ப்பாணம், டிசெ. 24

இணுவில் இந்துக்கல்லூரியில் மூன்று மாத கால யோகக் கலைப் பயிற்சி வகுப்பு நடைபெற்றது.

பயிற்சி வகுப்பின் நிறைவில் வளவாளர்களுக்கு மதிப்பளிக்கும் வைபவமும் பயிலுநர்களுக்கு சான்றிதழ் வழங்கும் வைபவமும் இணுவில் இந்துக் கல்லூரியில் கடந்த 21 ஆம் திகதி நடைபெற்றது. இதில், பேராசிரியர். க. தேவராஜா, யோகாக் கலையாசான் சிறி. நதிபரனுக்கு வாழ்த்துப்பா வழங்கி மதிப்பளித்தார். யோகக் கலை பயின்ற மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. (எ)

# வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களை அதிகாரிகள் தேடிச்செல்ல வேண்டும்

யாழ்ப்பாணம், டிசெ. 24

வெள்ளத்தில் தனது உடைமைகளையும் வாழ்வாதாரத்தையும் இழந்த ஒருவரால் அதிகாரிகளைத் தேடி அலுவலகங்களுக்கு அலைந்து திரிய முடியாது. எனவே, அதிகாரிகளே அந்த மக்களைத் தேடிச் சென்று விவரங்களைச் சேகரிக்க வேண்டும் என்று வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகன், அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளார்.

அத்துடன், பொதுமக்கள் தமது விவசாயம் மற்றும் கால்நடை வளர்ப்பு உள்ளிட்ட தொழில் முயற்சிகளை பதிவு செய்வதில் காட்டும் அக்கறையின்மையே, அனர்த்தங்களின் போது அவர்களுக்குரிய நிவாரணங்கள் கிடைப்பதில் சிக்கல்களை ஏற்படுத்துவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

வடக்கு மாகாண சிக்கனக் கடனுதவி கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனப் பிரதிநிதிகள், இயற்கைப் பேரிடரால் தமது சங்கம் எதிர்கொண்டிருக்கும் சவால்கள் குறித்து ஆளுநருடன் நேற்று முன்தினம் திங்கட்கிழமை மேற்கொண்ட கலந்துரையாடலின் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

"எமது மக்களிடம் ஒரு மிகப் பெரிய குறைபாடு உள்ளது. அவர்கள் விவசாயம், கால்நடை உள்ளிட்ட தங்கள் தொழில் முயற்சிகளை அரச கட்டமைப்புக்குள் பதிவு செய்வதில் போதிய அக்கறை காட்டுவதில்லை. இந்த அக்கறையின்மை, தற்போது ஏற்பட்டுள்ள இயற்கை பேரிடர் போன்ற சந்தர்ப்பங்களில் அரசாங்கத்தால் வழங்கப்படும் இழப்பீடுகள் மற்றும் நிவாரணங்களை பெற்றுக்கொள்வதில் அவர்களுக்குப் பாதகமான நிலையை ஏற்படுத்தியுள்ளது. நடந்தவற்றை ஒரு பாடமாக எடுத்துக்கொண்டு, இப்போதாவது மக்கள் தங்கள் தொழில் முயற்சிகளை முறையாகப் பதிவு செய்ய வேண்டும்," என்று கேட்டுக்கொண்டார். (எ-05)

பாவனையாளர் சட்டங்களை மீறிய

# 48 வியாபார நிலையங்களுக்கு எதிராக யாழ். மாவட்டத்தில் சட்ட நடவடிக்கை

யாழ்ப்பாணம், டிசெ. 24

பண்டிகை காலத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் மாவட்ட பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையினர் மாவட்டம் முழுவதும் விசேட சுற்றி வளைப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்தனர். இதில், இம் மாதத்தில் 22ஆம் திகதி வரையான காலப் பகுதியில் மட்டும் 48 வியாபார நிலையங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று அரசாங்க அதிபர் ம. பிரதீபன் தெரிவித்தார்.

மேலும், காலாவதியான பொருட்களை விற்பனை செய்தமை, கட்டுப்பாட்டு விலையை விட அதிக விலைக்குப் பொருட்களை விற்பனை செய்தமை, விலை காட்சிப்படுத்தாமல் பொருட்களை விற்பனை செய்தமை, பொதிகளில் உள்ள சுட்டுத் துண்டுகளில் திரிவுகளையும் மாற்றங்களையும் செய்தமை, போலி தயாரிப்புகள் மற்றும் எஸ். எல். எஸ். குறியீடற்ற தரமற்ற பொருட்களை விற்பனை செய்தமை, மின்சார மற்றும் இலத்திரனியல் சாதனங்களுக்கு உத்தரவாத சீட்டு வழங்கப்படாமல் விற்பனை செய்தமை போன்ற பல்வேறு குற்றங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

இக்காலப் பகுதியில் எரிவாயுவுக்கு போலியான தட்டுப்பாட்டை ஏற்படுத்துதல், பதுக்குதல் போன்ற செயல்பாடுகள் இடம்பெறுவதால் அது தொடர்பில் பொதுமக்களுக்கு ஏதேனும் அசௌகரியங்கள் ஏற்படின் 021-221-9001 என்ற தொலைபேசி இலக்கத்துக்கு தொடர்பை ஏற்படுத்தி மாவட்ட பாவனையாளர் அலுவலகங்கள் அதிகார சபைக்கு முறைப்பாட்டினை வழங்க முடியும் எனவும் அறிவித்துள்ளார்.

மேலும், தவறிழைக்கும் வியாபாரிகளுக்கு எதிராக தொடர்ந்தும் சட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் அதேவேளை பொதுமக்களும் பாவனையாளர்களும் பொருட்களை கொள்வனவு செய்யும்போது மிகவும் அவதானமாக செயல்படுமாறு அரசாங்க அதிபர் கேட்டுக் கொண்டுள்ளார். (எ-03)

# நாவற்குழியில் திருவிளையாடல் புராண சொற்பொழிவு

யாழ்ப்பாணம், டிசெ. 24

நாவற்குழி தெற்கு அருள்மிகு பெரும்படை அம்மன் ஆலயத்தில் சைவ வாழ்வியலில் திருவிளையாடல் புராணம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக சமயஜோதி சுதிர்காமன் நிஜலிங்கம் நடத்தும் வாராந்தத் திருவிளையாடல் புராணச் சிறப்புச் சொற்பொழிவுத் தொடர் - 37 எதிர்வரும் 26ஆம் திகதி வெள்ளிக்கிழமை

மாலை 04. 00 மணிக்கு நடைபெறவுள்ளது. பரஞ்சோதிமுனிவர் குருபூஜையை அடுத்து மாணவர்களின் கலை நிகழ்வும், இளஞ் சைவப்புலவர் க. கயிலைவாசனின் "பன்றிக்குட்டிகளை மந்திரிகளாக்கிய படலம்" என்னும் சொற்பொழிவும் நடைபெறவுள்ளது.

சொற்பொழிவிலிருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டு பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மின்சார சபையின் தன்னார்வ ஓய்வு கால திட்டத்தில் இழுபறி

## 2,200 பணியாளர்கள் பாதிப்பு

**கொழும்பு, டிசெ. 24**

**இலங்கை மின்சார சபையினால் அறிமுகப்படுத்தப்பட்ட தன்னார்வ ஓய்வு காலத் திட்டத்துக்கு விண்ணப்பித்த 2,200 இற்கும் மேற்பட்ட பணியாளர்கள், அத்திட்டம் தொடர்ச்சியாக தாமதமாவதால் மிகுந்த கவலையும் நிச்சயமற்ற தன்மையும் அடைந்துள்ளதாகத் தெரிவித்துள்ளனர்.**

பாதிக்கப்பட்ட பணியாளர்கள் இது தொடர்பாக வலுசக்தி அமைச்சருக்கு கடிதம் ஒன்றை எழுதியுள்ளனர்.

அதில், இத்திட்டத்தை நடைமுறைப்படுத்தும் உத்தியோக பூர்வ திகதியை உடனடியாக அறிவிக்குமாறு வலியுறுத்தியுள்ளனர்.

இந்த இழுபறி நிலை தங்களின் எதிர்காலத் திட்டங்களைச் சீர்குலைத்துள்ளதோடு, கடுமையான மன உளைச்சலையும் ஏற்படுத்தியுள்ளதாக அவர்கள் எச்சரித்துள்ளனர்.

ஓய்வுக்குப் பிந்தைய வாழ்க்கையை முன்னெடுத்துச் செல்லும் வகையில், மாற்று வேலை வாய்ப்புகள், சுயதொழில் முயற்சிகள் அல்லது வெளிநாட்டுப் பயணங்கள் போன்றவற்றுக்கு பணியாளர்கள் ஏற்கனவே தயாராகியுள்ளனர்.

ஆனால் முறையான திகதி அறிவிக்கப்படாததால் அவர்கள் எவ்வித முடிவும் எடுக்க முடியாத நிலையில் உள்ளனர்.

இலங்கை மின்சார சபையின் மறுசீரமைப்பு நடவடிக்கைகளைத் தொடர்ந்து, துணை நிறுவனங்களுடன் இனி இணைந்திருக்கப் போவதில்லை என்ற முடிவின் அடிப்படையிலேயே இவர்கள் இத்திட்டத்துக்கு விண்ணப்பித்துள்ளனர்.

2024 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க இலங்கை மின்சாரச் சட்டம் (திருத்தப்பட்ட) மற்றும் 2025 ஒகஸ்ட் 26 ஆம் திகதியிட்ட 2451/11 ஆம் இலக்க விசேட வர்த்தமானி அறிவித்தல் ஆகியவற்றிற்கு அமைவாகவே இந்த விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

அரசின் அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் இந்த ஓய்வு கால முயற்சிக்குத் தங்களின் ஆதரவைத் தெரிவித்துள்ள அதேவேளை, சில தரப்பினரின் சதி நடவடிக்கைகள் காரணமாகவே இந்த நடைமுறை தாமதமாவதாக பணியாளர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

இது இத்திட்டம் திட்டமிட்டபடி நடக்குமா என்ற அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

ஆயிரக்கணக்கான பணியாளர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்திருப்பவர்களின் வாழ்வாதாரத்தைக் கருத்திற்கொண்டு, இந்த விவகாரத்தில் நீதியுடனும் மனிதாபிமானத்துடனும் தலையிட்டு, ஓய்வு காலத் திகதியை விரைவாக அறிவிக்குமாறு வலுசக்தி அமைச்சரிடம் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(அ)

# பாதிக்கப்பட்ட 299,513 வீடுகளு 25,000 ரூபா நிவாரண கொடு

கொழும்பு, டிசெ. 24

"டித்வா" சூறாவளி காரணமாக பாதிக்கப்பட்ட 2 இலட்சத்து 99 ஆயிரத்து 513 வீடுகளுக்கு தலா 25 ஆயிரம் ரூபா நிவாரண கொடுப்பனவு வழங்கப்பட்டுவிட்டது என தேசிய அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் அறிவித்துள்ளது.

மேலும் ஒரு இலட்சத்து 69 ஆயிரத்து 944 வீடுகளுக்கு இன்டினும் இந்த நிவாரணத் தொகை வழங்கப்பட வேண்டியுள்ளதாக தேசிய அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் உதவி இயக்குநரும் ஊடகப் பேச்சாளருமான எம்.ஏ.ஏ.டி.ஜே.என். முனசிங்க தெரிவித்துள்ளார்.

முழுமையாக சேதமடைந்ததாக அடையாளம் காணப்பட்ட 6 இலட்சத்து 40 ஆயிரத்து 375 வீடுகளில், 4 ... ரத்து 457 ... ளர்கள் ... கட்டி... கப்படும் ... பனவிற்கு தகுதியானவர்கள் என்றும் அவர் கூறினார்.

இந்த நிவாரணத் திட்டத்திற்காக அரசாங்கம் மொத்தமாக 7 ஆயிரத்து 487 கோடி ரூபாவை செலவிடவுள்ளதாகவும் முனசிங்க உறுதிப்படுத்தினார்.

இதனிடையே, வீட்டு சேதங்களைத் தவிர்ந்த பிற துறைகளில் ஏற்பட்ட பாதிப்புகளுக்கான இழப்பீடுகள் இந்த மாத இறுதிக்குள் முழுமையாக வழங்கப்படும் என தேசிய அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

(அ)

# தடம் புரண்டது ரயில்!

கொழும்பு, டிசெ. 24

கொழும்பு கோட்டை மற்றும் மருதானை ரயில் நிலையங்களுக்கு இடையில் ரயில் ஒன்று தடம் புரண்டுள்ளது.

இதனால், அனைத்து ரயில் சேவைகளிலும் குறிப்பிடத்தக்க தாமதங்கள் ஏற்படும் என்று இலங்கை ரயில்வே திணைக்களம் தெரிவித்தது.

கொழும்பு கோட்டையிலிருந்து மீரிகமவுக்கு இயக்கப்படும் ஒரு விரைவு ரயிலே நேற்றுக் காலை 9.30 மணியளவில் தடம் புரண்டது.

மீட்புப் பணிகள் உடனடியாக முன்னெடுக்கப்பட்டதாக இலங்கை ரயில்வே திணைக்களம் மேலும் குறிப்பிட்டது.

(அ)

# டித்வா சூறாவளி நிவாரணம்: விசேட சுற்றறிக்கை வெளியீடு

கொழும்பு, டிசெ. 24

இலங்கையில் அண்மையில் ஏற்பட்ட டித்வா சூறாவளி, வெள்ளம் மற்றும் மண் சரிவினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்கும் திட்டத்தை மேலும் வலுப்படுத்தும் வகையில் நிதி அமைச்சு நேற்று முன்தினம் புதிய சுற்றறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

கடந்த டிசெம்பர் 5 ஆம் திகதி வெளியிடப்பட்ட 08/2025 இலக்க சுற்றறிக்கையில் சில திருத்தங்கள் மற்றும் தெளிவுபடுத்தல்களைச் செய்து இந்தப் புதிய சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

நிவாரணப் பணிகளை அதிக வினைத்திறனுடனும், வெளிப்படைத்தன்மையுடனும் முன்னெடுப்பதே இதன் நோக்கமாகும்.

இந்த நிவாரண உதவிகள் எவ்வித பாகுபாடுமின்றி தகுதியுள்ள அனைவருக்கும் கிடைப்பதை உறுதி செய்யுமாறு மாவட்ட செயலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அத்துடன், இந்தப் பணிகளை ஒருங்கிணைப்பதிலும், பாதுகாப்பை உறுதிப்படுத்துவதிலும் காவல்துறை மற்றும் அனர்த்த முகாமைத்துவ அதிகாரிகள் தொடர்ந்தும் ஒத்துழைப்பு வழங்கி வருகின்றனர். (அ)

# அனர்த்தத்தால் பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள பழங்குடி சமூகம்!

கொழும்பு, டிசெ. 24

இலங்கையைத் தாக்கிய டித்வா சூறாவளி, நாட்டின் பூர்வீகக் குடிகளான பழங்குடி சமூகத்தினரின் பொருளாதாரத்தில் கடும் பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது.

மண் சரிவு மற்றும் வெள்ளம் போன்ற நேரடிப் பாதிப்புகள் ஏதுமில்லாத போதிலும், இந்த இயற்கைச் சீற்றத்தால் சுற்றுலாப் பயணிகளின் வருகை முற்றிலும் முடங்கியுள்ளது.

தங்களின் அன்றாட வாழ்வாதாரத்துக்காகச் சுற்றுலாவையும் கைவினைப் பொருட்களையும் மட்டுமே நம்பியிருக்கும் இச்சமூகத்தினர், தற்போது வருமானமின்றி நிதி நெருக்கடியில் சிக்கித் தவிப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

பொதுவாகத் தற்சார்பு வாழ்க்கை முறையைக் கடைப்பிடிக்கும் இவர்கள், தற்போதைய அசாதாரண சூழலைக் கருத்தில் கொண்டு அரசாங்கத்திடமிருந்து நிவாரண உதவிகளை எதிர்பார்ப்பதாக பழங்குடி தலைவரான உறுவரிகே வன்னில அத்தோ தெரிவித்துள்ளார்.

நாடு முழுவதும் ஏற்பட்ட போக்குவரத்துத் தடைகள் மற்றும் பயண இரத்துகள், மக்களின் பொருளாதாரப் பாதுகாப்பை கேள்விக்குறியாக்கியுள்ளது.

இக்கட்டான இந்தச் சூழலில், மிகக் கடுமையாகப் பாதிக்கப்பட்ட பிற மக்களுக்கு முன்னுரிமை அளித்தாலும், தமக்கும் சிறு உதவி கிடைப்பது பயனுள்ளதாக இருக்கும் என அவர் தெரிவித்துள்ளார்.

(அ)

எச்சரிக்கை!
உங்கள் வீட்டில் சட்டவிரோத இந்தியன் DTH (DishTV) இருக்கிறதா?
SUN DIRECT | TATA sky | dishtv | VIDEOCON d2h Digital DTH Service
இவற்றை விற்பனை செய்வதும், பயன்படுத்துவதும்
இரண்டுமே சட்டவிரோதம்!
அவசியமற்ற சட்டப்பிரச்சனைகளை தவிர்க்க,
இன்று எமது சட்டபூர்வ கேபிள் டிவி இணைப்பை
பெற்றுக்கொள்ளுங்கள்!
It has come to our notice that illegal DTH (Dish TV) service providers are advertising unverified services through social media platforms. While we have initiated measures to stop such illegal operations, TRC would like to notify all consumers to be cautioned of obtaining services from such illegal vendors or making any type of payments. You may refer http://www.trc.gov.lk/direct-to-home-satellite-broadcasting-operators.html for information on authorized DTH operators before subscribing for such services.
Telecommunications Regulatory Commission of Sri Lanka
155 செனல்கள்
1420/- ரூபா
(அனைத்துவரிகளும் சேர்த்து)
புதிய இணைப்புக்கு 10,000/- ரூபா மட்டுமே!
தொடர்புக்கு
0707 888 999
Ask CABLE VISION
உங்கள் நம்பிக்கைக்குரிய கேபிள் டிவி சேவை!
நம்பகமான சேவை | தெளிவான படம் மற்றும் ஒலி | சட்டபூர்வ பாதுகாப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தையிட்டியில் நடந்த சம்பவம் மிகவும் மூர்க்கத்தனமானது!

## சிறிநேசன் எம். பி. கண்டனம்

மட்டக்களப்பு, டிசெ. 24

தையிட்டியில் இடம்பெற்ற சம்பவமானது மிகவும் மூர்க்கத் தனமானது. - கண்டிக்கத்தக்கது என்று இலங்கை தமிழ் அரசுக்கட் சியின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஞா. சிறிநேசன் தெரிவித்தார்.

பிக்குகள் எவ்வளவு அட்ட காசம் செய்தாலும் அவர்களு டன் கண்ணியமாக நடந்துகொள் ளும் பொலிஸார் இந்து மதகு ருவை நடத்திய விதம் கண்டிக் கத்தக்கது எனவும் அவர் தெரி வித்தார்.

நேற்று முன்தினம் மாலை மட்டக்களப்பு செட்டிப்பாளை யத்தில் நடைபெற்ற ஊடகவிய லாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில்,

தேசிய மக்கள் சக்தி அரசாங் கத்தின் முற்போக்கான சில விட யங்களை பாராட்டிக்கொண்டி ருக்கும்போது பிற்போக்கான, மூர்க்கத்தனமான, கடந்த ஆட் சிக்காலத்தில் நடந்ததுபோன்ற விடயங்கள் நடக்கும்போது அதனை நாங்கள் கண்டிக்காமல் இருக்க முடியாது.



தையிட்டியில் இடம்பெற்ற மூர்க்கத்தனமான செயல்பாட் டினை, பலாத்காரமான செயல் பாட்டினை நாங்கள் கண்டிக் கின்றோம். காவியுடை தரித்த, படித்த இந்து துறவை மிக கேவ லமான முறையில் பொலிஸார் நடத்தியுள்ளனர். அதேநேரம் சில பிக்குகள் எவ்வளவு அட்ட காசம் செய்தாலும் அவர்களை மிக கண்ணியமாக அணுகுகின் றனர் எனவும் அவர் தெரிவித்தார்.

# மத்தியஸ்த சபை குறித்து விழிப்புணர்வு செயலமர்வு

கல்முனை, டிசெ. 24

மத்தியஸ்த சபைகள் தொடர் பான விழிப்புணர்வு செயலமர் வுகள் மூன்று கட்டங்களாக நேற்று நடைபெற்றன.

அம்பாறை, கல்முனை பிர தேச செயலாளர் அஷ்ஷெய்க் ரீ.எம்.எம்.அன்சார் வழிகாட்ட லில் கல்முன்ன விதாதா வள நிலையத்தில் இந்த செயலமர்வு கள் நடைபெற்றன.

இந்தச் செயலமர்வில் அபிவி ருத்தி உத்தியோகத்தர்கள் மற் றும் மாதர் சங்க உறுப்பினர்கள், சமுர்த்திப் பயனாளிகள் கலந்து கொண்டனர்.

இதன்போது, கல்முனை பிர தேச செயலகத்தின் மத்தியஸ்த சபைக்கு பொறுப்பான அபிவி ருத்தி உத்தியோகத்தர் பாறுக் ஷிஹானின் நெறிப்படுத்தலில் நாவிதன்வெளி பிரதேச செயலகத் தின் மத்தியஸ்த சபைக்கு பொறுப் பான அபிவிருத்தி உத்தியோகத் தர் ஐ.எல்.எம். அன்பாஸ் வளவா ளராக கலந்து கொண்டு பல்வேறு விளக்கங்களை வழங்கினார்.

மத்தியஸ்த சபைகள் என்றால் என்ன? அதனால் கிடைக்கும் நன்மைகள் என்ன?, மத்தியஸ்த சபைகளால் ஆற்றுப்படுத்தப்ப டும் பிணக்குகளை எவ்வாறு கையாள்வது, தீர்க்கப்பட்ட மைக்கான சான்றிதழ் மற்றும் தீர்க்காமைக்கான சான்றிதழ்கள் வழங்குவது தொடர்பாகவும் மத்தியஸ்த சபைகள் தொடர் பான ஏனையவர்களுக்கு தெரி யப்படுத்துமாறு அறிவுறுத்தப் பட்டது. (எ-01)

# கண்டி மகாமாயா பெண்கள் கல்லூரியை மூட நடவடிக்கை

கண்டி, டிசெ. 24

தற்போதைய சூழ்நிலையை கருத்தில் கொண்டு, மறு அறி வித்தல் வரை மகாமாயா பெண் கள் கல்லூரியை தற்காலிகமாக மூடுவதற்கு கண்டி கல்வி வலய கல்வி அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனத்தினர் கண்டி நகரிலுள்ள இரண்டு பிரபல பாடசாலைக ளுக்கு சென்று ஆய்வுகளை மேற்கொண்டனர்.

கண்டியில் உள்ள பிரபல பாடசாலைகளான தர்மராஜா கல்லூரி மற்றும் மகாமாயா கல்லூரி ஆகிய பாடசாலைக ளுக்கே தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவன அதிகாரிகள் சென்று ஆய்வு மேற்கொண்டனர்.

அண்மையில் ஏற்பட்ட டித்வா புயல் காரணமாக இந்த இரண்டு பாடசாலை கட்டடங் களும் சேதமடைந்தன.

தர்மராஜ கல்லூரியின் வணி கப் பிரிவு கட்டடம், மற்றும் 8 - 9ஆம் வகுப்புகள் நடைபெ றும் கட்டடம், விளையாட்டு மைதானம் மற்றும் நீச்சல் தடா கம் ஆகியவற்றை பயன்படுத்து வதற்கு தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் தற்காலிக தடை விதித் துள்ளது.

தர்மராஜா கல்லூரிக்கு சொந் தமாக 58 ஏக்கர் காணி உள்ளது. இதன் பல்வேறு இடங்களையும் குறித்த குழுவினர் ஆய்வு செய்த னர்.

மகாமாயா பெண்கள் கல்லூ ரி கட்டடங்கள் குறித்து தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் மேற்கொண்ட ஆய்வுகளின் முடிவு இன்னும் கிடைக்க வில்லை என்று கண்டி, கங்கா வட்டா கோரலே பிரதேச செய லாளர் அமில நவரத்ன தெரிவித் தார். இந்த நிலையில், மறு அறி வித்தல் வரை மகாமாயா பெண் கள் கல்லூரியை தற்காலிகமாக மூடுவதற்கு கண்டி கல்வி வலய கல்வி அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர். (எ)


# சந்தை வியாபாரிகளின் பிரச்னை பற்றி ஆளுநர் தலைமையில் கலந்துரையாடல்

திருகோணமலை, டிசெ. 24

திருகோணமலை பிரதான மரக்கறி வியாபாரிகளின் சந்தை யில் எழுந்துள்ள பிரச்னைகள் தொடர்பில் கிழக்கு மாகாண ஆளுநர் ஜயந்த லால் ரத்னசே கர தலைமையில் திருகோணம லையில் உள்ள ஆளுநர் அலுவ லகத்தில் நேற்று முன்தினம் விசேட கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது.

இதில், தற்போதைய நிலை யில் உருவாகியுள்ள பிரச்னை கள் குறித்து கலந்துரையாடப் பட்டதுடன், அவற்றை தீர்ப்ப தற்காக எடுக்க வேண்டிய நடவ டிக்கைகள் பற்றியும் கலந்துரை யாடப்பட்டன.

இங்கு அனைத்து தரப்பின ரின் இணக்கப்பாட்டின் அடிப் படையில் செயல்படுவது மற் றும் நீண்டகால தீர்வுகள் குறித்து விரிவாக பேசப்பட்டன. மேலும், சந்தை அபிவிருத்தி மற்றும் அதற் காக எதிர்காலத்தில் எடுக்க



வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் விரிவாக கலந்துரை யாடல் நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் திருகோணமலை மாவட்ட பாரா ளுமன்ற உறுப்பினர் ரொஷான் அக்மீமன, திருகோணமலை மாநகர சபை முதல்வர் க. செல் வராசா, முதலமைச்சின் செய லாளர், மாகாண உள்ளூராட்சி ஆணையாளர், நகர அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் மற்றும் மரக்கறி வியாபாரிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண் டனர். (எ)

# திருமலை மாநகர சபை பட்ஜெட் நிறைவேற்றம்

திருகோணமலை, டிசெ. 24

இலங்கை தமிழ் அரசுக்கட்சி வசமுள்ள திருகோணமலை மாந கர சபையின் 2026 ஆம் ஆண் டுக்கான முதலாவது பட்ஜெட் சபையின் சகல உறுப்பினர்களின் ஆதரவுடன் நிறைவேற்றப்பட் டுள்ளது.

திருகோணமலை மாநகர சபையின் பாதீட்டை சமர்ப்பிக் கும் சபை அமர்வு நேற்று செவ் வாய்க்கிழமை நடைபெற்றது.

மாநகர சபையின் முதல்வர் க . செல்வராஜா தலைமையில் நடைபெற்ற இந்த அமர்வில் பிரதி முதல்வர், உறுப்பினர்கள், மாநகர சபை ஆணையாளர் ஆகி யோர் கலந்து கொண்டனர்.

இதன்போது வரவு- செலவுத் திட்டத்தை சமர்ப்பித்து மாநகர சபையின் முதல்வர் க. செல்வ ராஜா விசேட உரை நிகழ்த்தினார்.

அதனைத் தொடர்ந்து சபை உறுப்பினர்களின் ஆதரவுடன் பாதீடு நிறைவேற்றப்பட்டது.

25 உறுப்பினர்களைக்கொண்ட திருகோணமலை மாநகர சபை யில் ஓர் உறுப்பினரைத் தவிர 24 உறுப்பினர்கள் சமுகமளித் திருந்தனர் என்பது குறிப்பிடத் தக்கது. (எ-04)

# மட்டக்களப்பு, கிரான்குளம் பகுதியில் மோட்டார் சைக்கிளை மோதிய கார்!

## காலை உணவு விற்பவர் காயம்

மட்டக்களப்பு, டிசெ. 24

மட்டக்களப்பு, காத்தான் குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கிரான்குளம் பகுதியில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை காலை இடம்பெற்ற விபத்தில் ஒருவர் காயமடைந்துள்ளதாக காத்தான்குடி பொலிஸார் தெரி வித்தனர்.

மட்டக்களப்பு - கல்முனை வீதி வழியாக கல்முனை பகுதி யிலிருந்து மட்டக்களப்பு நோக் கிப் பயணித்துக் கொண்டிருந்த கார், கிரான்குளம் தர்மபுரம் சந் தியில் வைத்து வீதியை கடக்க முற்பட்டபோது, காலை உணவு விற்பனை செய்பவரின் மோட் டார் சைக்கிளுடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்த விபத்தின் போது, மோட்டார் சைக்கிள் சாரதிக்கு காயம் ஏற்பட்ட நிலையில் விற் பனைக்காக மோட்டார் சைக்கி ளில் எடுத்துவரப்பட்ட காலை உணவுகள் அனைத்தும் வீதியில் சிதறிக் காணப்பட்டன. இது தொடர்பான மேலதிக விசார ணைகளை காத்தான்குடி பொலி ஸார் மேற்கொண்டு வருகின்ற னர். (எ)

# பொத்துவில் வனப்பகுதியில் கஞ்சா செய்கை முற்றுகை!

பொத்துவில், டிசெ. 24

அம்பாறை, பொத்துவில் - பக் மெடியாவ வனப்பகுதியில் கஞ்சா செய்கைகள் சுற்றிவளைக்கப்பட் டுள்ளதுடன், இரண்டு துப்பாக் கிகளுடன் சந்தேக நபர்கள் இரு வர் கைது செய்யப்பட்டனர்.

நேற்று முன்தினம் திங்கட் கிழமை மதியம் இந்த சம்பவம் பதிவாகியுள்ளது.

பொலிஸ் விசேட அதிரடிப் படை சாஸ்திரவேலி முகாமின் அதிகாரிகள் குழுவினரால் இந் தக் கைது நடவடிக்கை முன்னெ டுக்கப்பட்டுள்ளது.

சுமார் ஒன்றரை ஏக்கர் பரப் பளவில் பயிரிடப்பட்ட 03 கஞ்சா சேனைகள் சுற்றிவளைக்கப்பட் டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதன்போது 60, 000 கஞ்சா செடிகள் மற்றும் உள்ளூரில் தயாரிக்கப்பட்ட இரண்டு துப் பாக்கிகளுடன் இரண்டு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டு பொத்துவில் பொலிஸ் நிலையத் தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்கள் 30 மற்றும் 34 வயதுடைய, பக்மிடியாவ பகுதியைச் சேர்ந்தவர்கள் என தெரியவந்துள்ளது.

பொத்துவில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர். (எ)

# "பிரஜா சக்தி" குழு உறுப்பினர்களுக்கு நியமனக் கடிதங்கள் வழங்கி வைப்பு

நுவரெலியா, டிசெ. 24

நோர்வூட் பிரதேச செயல கப் பிரிவின் "பிரஜா சக்தி" குழு உறுப்பினர்களுக்கான நியமனக் கடிதங்கள் வழங்கும் நிகழ்வும், பயிற்சித் திட்டத்தின் ஆரம்ப விழாவும் நேற்று முன்தினம் டிக் கோயா நகர மண்டபத்தில் நடை பெற்றது.

நுவரெலியா மாவட்ட அபி விருத்தி குழுத் தலைவரும், பாரா ளுமன்ற உறுப்பினருமான மஞ் ஜுளா சுரவீர ஆராச்சி, பாராளு மன்ற உறுப்பினர் கிருஷ்ணன் கலைச்செல்வி மற்றும் நோர்வூட் பிரதேச செயலாளர் சமீர [illegible] ஆகியோரின் தலைமையில் இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டி ருந்தது.

இதன்போது, நோர்வூட் பிர தேச செயலகத்துக்கு உட்பட்ட 35 கிராம உத்தியோகத்தர் பிரி வுகளின் "பிரஜா சக்தி" குழுத் தலைவர்களுக்கு உத்தியோக பூர்வ நியமனக் கடிதங்கள் வழங் கப்பட்டன.

பிரதேச மட்டத்தில் மக்க ளின் பிரச்னைகளை கண்டறிந்து, அபிவிருத்தி செயல்பாடுகளை வலுப்படுத்துவதே இந்தக் குழுக் களின் முதன்மை நோக்கமாகும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாகாண...

நீடித்திருந்தது.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி சார்பில் அதன் பதில் தலைவர் சீ. வீ. கே. சிவஞானம், பதில் பொதுச் செயலாளர் எம். ஏ. சுமந்திரன், நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவஞானம் சிறீதரன், இரா. சாணக்கியன், ரெலோ கட்சியின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் எம். பி., தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம். பி., புளொட் தலைவர் த. சித்தார்த்தன், ஈ. பி. ஆர். எல். எவ்.வின் தலைவர் சுரேஷ் பிறேமச்சந்திரன் ஆகியோர் இந்தச் சந்திப்பில் பங்கேற்றிருந்தனர்.

பங்கேற்றவர்கள் அனைவரும் மாகாண சபைகள் தேர்தலை இனியும் இழுத்தடிக்காமல் நடத்த வேண்டும் என்று அரசாங்கத்தை வலியுறுத்த வேண்டும் என்று கோரினர்.

இதன்போது, மாகாண சபைகள் தேர்தல் தொடர்பில் அரசின் நிலைப்பாடு - கருத்து வெளிப்பாடுகள் - நாட்டில் உள்ள நிலைமை குறித்து தமிழ் தலைவர்களின் கருத்துகளை இந்திய வெளிவிவகார அமைச்சர் கேட்டறிந்து கொண்டார்.

"தமிழ் மக்களுக்கான இறுதித் தீர்வு ஒற்றையாட்சியின் கீழ் சாத்தியமில்லை. மாகாண சபைகள் முறைமை இனப்பிரச்னைக்கான தீர்வு இல்லை. ஆயினும், இன்றைய நிலையில் மாகாண சபைகள் தேர்தல் இழுத்தடிக்காமல் நடைபெற வேண்டும்" என்று கஜேந்திரகுமார் எம். பி. சுட்டிக்காட்டினார்.

"எங்களின் நிலைப்பாடும் இதுவே. சமஷ்டி அடிப்படையிலான தீர்வு கட்டாயமானது. ஆனால், அதனை கட்டமைப்பில் எதிர்பார்க்கிறோமே தவிர, சமஷ்டி என்ற பெயரை வலியுறுத்தவில்லை", என்று சுமந்திரன் கூறினார்.

இந்த சந்திப்பில் பேரிடர் பாதிப்புகள் - மீட்பு நடவடிக்கைகள் - நிவாரணங்கள் எனப் பல விடயங்கள் தொடர்பிலும் தமிழ் தலைவர்களிடம் வெளிவிவகார அமைச்சர் கேட்டறிந்தார். அத்துடன், பேரிடர் பாதிப்புக்கு இந்தியா அளித்து வரும் உதவி - ஒத்துழைப்புகளுக்கு தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள் நன்றியும் தெரிவித்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## பேரிடர்...

வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத்துடன் இணைந்து ஒப்ரேஷன் சாகர் பந்து திட்டத்தின் ஒரு பகுதியாக கிளிநொச்சி மாவட்டத்தில் பெய்லி பாலத்தை மெய்நிகர் வழியில் திறந்து வைத்தார். இதன் பின்னர் நடத்தப்பட்ட இரு தரப்பு செய்தியாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், பிரதமர் மோடியின் சிறப்பு தூதராக இலங்கை ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கவுக்கு செய்தியை கொண்டு வந்ததாக கூறிய அவர், இந்திய பிரதமர் மோடியின் கடிதத்தின் மூலம், முதல் பதிலளிப்பாளராக இந்தியா மேற்கொண்ட நடவடிக்கைகளை மேலும் வலுப்படுத்தும் வகையில், இலங்கையின் மீள் கட்டுமானத்துக்காக 45 கோடி அமெரிக்க டொலர் உதவி வழங்கப்படும் என உறுதியளிக்கப்பட்டுள்ளது - என்றார்.

அத்துடன், இந்த உதவியை எவ்வாறு மிக விரைவாக வழங்குவது என்பது குறித்தும் பேச்சுகள் நடைபெற்றன என்றும் இலங்கை நெருக்கடியை எதிர்கொண்ட ஒவ்வொரு தருணத்திலும் இந்தியா துணை நின்றுள்ளதாகவும் கூறினார்.

பேரிடரால் பாதிக்கப்பட்டபோது, 80 உறுப்பினர்களைக் கொண்ட தேசிய பேரிடர் மீட்பு படை குழு மீட்பு பணிகளில் ஈடுபட்டதுடன், கண்டி அருகே இந்திய இராணுவம் அமைத்த கள மருத்துவமனையில் 8 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்களுக்கு அவசர மருத்துவ சேவைகள் வழங்கப்பட்டன.

பாதிக்கப்பட்ட பகுதிகளில் போக்குவரத்து இணைப்புகளை மீட்டெடுப்பது அவசர தேவையாக இருந்ததால் கிளிநொச்சியில் பெய்லி பாலம் ஒன்று விமானம் மூலம் கொண்டு வரப்பட்டு அமைக்கப்பட்டது. சிலாபத்தில் மேலும் ஒரு பாலம் நிர்மாணிக்கப்பட்டு வருகிறது. இது வரை 1,100 தொன் நிவாரணப் பொருட்கள், 14.5 தொன் மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன - என்றும் சுட்டிக்காட்டியிருந்தார். (ஐ)

## வடக்குக்கு...

திட்டமிடலும் சட்டமும் ஒழுங்கும் காணி, மின் சக்தி, வீடமைப்பும் நிர்மாணமும், சுற்றுலா, உள்ளூராட்சி, மாகாண நிர்வாகம், கிராம அபிவிருத்தி, வீதி அபிவிருத்தி, மோட்டார் போக்குவரத்து மற்றும் போக்குவரத்து அமைச்சின் 2026ஆம் ஆண்டுக்கான திட்ட முன்மொழிவுகளை ஆராயும் விசேட உயர்மட்டக் கூட்டம் நேற்று ஆளுநர் செயலகத்தில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்துக்குத் தலைமை தாங்கி உரையாற்றும் போதே ஆளுநர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அத்துடன், "எமது அலுவலர்கள் பலர் முடிவுகளை எடுப்பதற்குத் தயங்குகின்றனர். எங்கே தங்கள் ஓய்வூதியம் பறிபோய்விடுமோ என்ற அச்சம் அவர்களுக்கு உள்ளது. நாம் மக்களுக்காக நேர்மையாகச் செயல்படும் போது எதற்கும் அஞ்சத் தேவையில்லை. அதிகாரிகள் துணிவாகவும் விரைவாகவும் முடிவெடுத்துச் செயலாற்ற வேண்டும் - என்றும் ஆளுநர் குறிப்பிட்டார்.


# எம்மை விமர்சிப்பதால் எந்த பயனும் கிடைக்காது

## நாமல் ராஜபக்ஷ சொல்கிறார்

கொழும்பு, டிசெ. 24

ராஜபக்ஷர்களை திருடர்கள் என்று கூறிக்கொண்டு அரசாங்கம் ஊழல்வாதிகளையும் பாதாளக் குழுக்களையும் அரசாங்கமே பாதுகாக்கிறது. எம்மை விமர்சித்துக் கொண்டிருப்பதால் எவ்வித பயனும் கிடைக்காது என்பதை அரசாங்கம் தெரிந்துகொள்ள வேண்டும் - என்று பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

மேலும், "அனர்த்தங்களால் மத தலங்கள் சேதமடைந்துள்ளன. அவற்றை புனரமைப்பதற்கு அரசாங்கம் விசேட நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இதேபோல் மத தலங்களுக்கு தேவையான வசதிகளையும் அரசாங்கம் வழங்க வேண்டும்.



அரசாங்கம் எம்மை விமர்சித்துக் கொண்டு கஞ்சா வளர்க்கிறது. குற்றவாளிகளுக்கும் சமூக விரோத செயல்களில் ஈடுபடுபவர்களுக்கும் எதிராக கடும் நடவடிக்கை எடுப்பதாக ஆட்சிக்கு வருவதற்கு முன்னர் அரசாங்கம் குறிப்பிட்டது. ஆனால், தற்போது அரசாங்கத்துக்குள்தான் சகல குற்றவாளிகளும் மோசடியாளர்களும் உள்ளார்கள்.

ராஜபக்ஷர்களை திருடர்கள் என்று கூறிக் கொண்டு அரசாங்கம் ஊழல்வாதிகளையும் பாதாளக் குழுக்களையும் அரசாங்கமே பாதுகாக்கிறது. அரசாங்கத்துக்கு எதிராக செயல்படுபவர்கள், பேசுபவர்கள் அரச அதிகாரத்தால் அச்சுறுத்தப்படுகிறார்கள்.

எம்மை விமர்சித்துக் கொண்டிருப்பதால் எவ்வித பயனும் கிடைக்காது என்பதை அரசாங்கம் தெரிந்துகொள்ள வேண்டும். கடந்த காலங்களில் எம்மீது முன்வைத்த குற்றச்சாட்டுகள் அனைத்தும் பொய்யாக்கப்பட்டுள்ளன - என்று நேற்றைய தினம் நாத்தாண்டியவில் நடைபெற்ற பொதுமக்கள் சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்டார். (ஐ)

## ரயில்...

- பளை - இத்தாவில் பகுதியில் நேற்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் இடம்பெற்றுள்ளது. இதில், யாழ்ப்பாணம் - ஆனைப்பந்தியைச் சேர்ந்த இரத்தினராசா கிருஷ்ணமோகன் (வயது -52) என்பவரே உயிரிழந்தார்.

பாதுகாப்பான புகையிரத கடவையிலேயே விபத்து இடம்பெற்றதாகவும் அந்தச் சமயத்தில் காவலாளி பணியில் இருக்கவில்லை என்றும் இதுபோன்று முன்னரும் இரு தடவைகள் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன எனவும் அந்தப் பகுதி மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

காங்கேசன்துறையிலிருந்து அநுராதபுரம் சென்ற யாழ்ராணி ரயில் மோதியே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பிலான விசாரணைகளை பளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## இலங்கை...

நேற்றையதினம் ஜனாதிபதியை சந்தித்த இந்திய வெளிவிவகார அமைச்சர் சு. ஜெய்சங்கர் இந்திய பிரதமரின் கடிதத்தை நேரில் வழங்கினார். அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டவை வருமாறு,

"இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க அதிமேதகு ஜனாதிபதி அவர்களே, உங்கள் நாடு "டித்வா" புயலில் இருந்து மீண்டு வரும் நிலையில், இலங்கையின் நிவாரணம் மற்றும் மீளக் கட்டியெழுப்பும் திட்டத்துக்கு இந்தியா எவ்வாறு உதவ முடியும் என்பது குறித்து ஆராய்வதற்காக வெளிவிவகார அமைச்சர் எஸ். ஜெய்சங்கரை எனது விசேட பிரதிநிதியாக அனுப்புகிறேன்.

"அயலவருக்கு முன்னுரிமை" எனும் எங்கள் கொள்கை மற்றும் முதலில் பதிலளிப்பவராக இருப்பதற்கான எங்கள் உறுதிப்பாட்டின்படி, திடீரென ஏற்பட்ட சவால்களுக்கு முகங்கொடுப்பதற்காக "சாகர் பந்து" நடவடிக்கையை நாம் ஆரம்பித்தோம். இந்திய கப்பல்கள், விமானங்கள் மற்றும் ஹெலிகொப்டர்கள் நிவாரணப் பொருட்களையும் அவசரமாகத் தேவையான பொருட்களையும் கொண்டு வந்தன. அவர்கள் மீட்கும் நடவடிக்கைகளுக்கு உதவியதோடு, அவசர மருத்துவ சேவைகளை வழங்கவும் பாதிக்கப்பட்ட தகவல் தொடர்பு கட்டமைப்புகளை மீளமைக்கவும் இந்திய விசேட குழுக்கள் அனுப்பப்பட்டன. பாதிக்கப்பட்ட மக்களின் உயிர்களைக் காப்பாற்ற "சாகர் பந்து" நடவடிக்கை உதவியதோடு இது எங்கள் இரு நாடுகளுக்கும் இடையிலான உறவின் பரந்த மற்றும் ஆழமான வெளிப்பாடாக அங்கீகரிக்கப்பட்டிருப்பது குறித்து மகிழ்ச்சி அடைகிறோம்.

"இலங்கை தற்போது அடுத்த கட்டம் குறித்து கவனம் செலுத்தியுள்ளவேளையில், நம்பகமான பங்காளியாகவும் நம்பகமான நண்பராகவும் இந்தியா சாத்தியமான அனைத்து ஆதரவையும் வழங்கும் என்பதை நான் உங்களுக்கு உறுதியளிக்க விரும்புகிறேன். இலங்கை மக்களின் வாழ்க்கையை மீண்டும் கட்டியெழுப்புவதிலும் அவர்களின் தாங்கிக் கொள்ளும் சக்தியை உறுதிப்படுத்துவதில் கடந்த காலத்தைப்போன்றே நாங்கள் உங்களுடன் தோளோடு தோள் நிற்போம். இந்த சூழலில், இந்தியா ஒரு விரிவான சலுகை பொதியை வழங்குகிறது என்பதை உங்களுக்குத் தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். சலுகைப் பொதி எவ்வாறு சிறப்பாக செயல்படுத்தலாம் என்பது குறித்து உங்கள் அரசாங்கத்துடன் கலந்துரையாடுமாறு அமைச்சர் ஜெய்சங்கருக்கு அறிவித்துள்ளோம்.

"இலங்கை எப்போதும் இல்லாத அளவுக்கு வலிமையாக எழுச்சிபெறும் என்று நான் நம்புகிறேன். இந்தப் பயணத்திலும், தேசிய அபிவிருத்தி மற்றும் முன்னேற்றத்திலும் இந்தியா எப்போதும் இலங்கைக்கு நெருக்கமாக இருக்கும். அதிமேதகு ஜனாதிபதி அவர்களே, எனது மேலான இந்த ஆதரவை ஏற்றுக் கொள்ளுங்கள்", - என்றுள்ளது. (ஐ)

## யாழ்...

க. இளங்குமரன் மற்றும் யாழ். மாநகர சபை உறுப்பினர்கள், டான் தொலைக் காட்சி குழுமத்தினர் மற்றும் பொதுமக்கள் எனப் பலர் பங்கேற்றனர். (ஐ)

## ஒவ்வாமை...

அறியவருபவை வருமாறு,

உயிரிழந்த சிறுமி கடந்த ஞாயிற்றுக்கிழமை மாட்டிறைச்சி உட்கொண்டுள்ளார். இதைத் தொடர்ந்து ஒவ்வாமையால் பாதிக்கப்பட்டுள்ளார். சிறுமியின் தாயார் அவரை முல்லைத்தீவு பொது மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்துள்ளார்.

அங்கு சிறுமிக்கு ஊசி மூலம் ஒவ்வாமைக்கான மருந்து செலுத்தப்பட்டது. அந்த ஊசி செலுத்தப்பட்ட சிறிது நேரத்தில் சிறுமி உயிரிழந்தார் என்று கூறப்படுகிறது. சிறுமியின் மரணத்துக்கு ஒவ்வாமை மருந்து அதீதமாக செலுத்தப்பட்டமையே காரணம் என்று மருத்துவமனையை சேர்ந்தவர்கள் தமக்கு தெரிவித்தனர் என்று உறவினர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர். இதே குற்றச்சாட்டை மருத்துவமனை வட்டாரங்களை அடிப்படையாகக் கொண்டு அங்குள்ள ஊடகவியலாளர்களும் தமது சமூகவலைத் தளங்களில் குறிப்பிட்டுள்ளனர்.

இந்த நிலையில், உரிய பிரேத பரிசோதனை எதுவுமின்றி சிறுமியின் சடலத்தை மருத்துவமனை நிர்வாகம் ஒப்படைத்துள்ளது என்றும் இது தொடர்பில் நீதியான விசாரணை அவசியம் என்றும் அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

இதனிடையே, இவ்வாறான சம்பவங்கள் முல்லைத்தீவு மருத்துவமனையில் தொடர்கின்றன. அங்கு சட்ட மருத்துவ அதிகாரி ஒருவர் சேவையில் இல்லாதமையும் இவை தொடர ஒரு காரணம் என்றும் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

இதேசமயம், இந்தக் குற்றச்சாட்டுகள் தொடர்பில் முல்லைத்தீவு பொது மருத்துவமனை நிர்வாகத்தின் கருத்துகளை உடனடியாக பெற முடியவில்லை. (ஐ)

## மாணவன்...

பாடசாலை மாணவர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர்கள் அனைவரும் விசாரணைகளை தொடர்ந்து யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளனர். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

## அர்ச்சுனாவுக்கு பிடியாணை

கொழும்பு, டிசெ. 24

பாராளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனாவை கைது செய்து நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துமாறு கோட்டை நீதவான் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

கோட்டை பொலிஸ் நிலையத்தை சேர்ந்த அதிகாரி ஒருவர் தனது கடமையைச் செய்துகொண்டிருந்தபோது, அவருக்கு இடையூறு விளைவித்ததாக இராமநாதன் அர்ச்சுனா மீது வழக்கு தொடரப்பட்டுள்ளது.

இந்த வழக்கு நேற்று கோட்டை நீதவான் இசுறு நெத்திகுமார முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

ஏற்கனவே இந்த வழக்கில் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா, நேற்றைய வழக்கு விசாரணையின்போது நீதிமன்றத்தில் முன்னிலையாகியிருக்கவில்லை.

இதனைத் தொடர்ந்து, அவரை உடனடியாகக் கைது செய்து நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துமாறு நீதவான் பிடியாணை பிறப்பித்தார். (அ)

## 12 தமிழக மீனவர்கள் கைது!

மன்னார், டிசெ. 24

சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் தமிழ் நாட்டின் இராமநாதபுரம் மாவட்டம் தங்கச்சிமடம் பகுதியைச் சேர்ந்த 12 மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இலங்கை கடற்படையினரால் அவர்கள் நேற்று கைது செய்யப்பட்டனர்.

இதன்போது அவர்களின் படகொன்றும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தனுஷ்கோடி மற்றும் தலைமன்னார் இடையே மீன்பிடியில் ஈடுபட்டிருந்த வேளையில் அவர் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# டித்வா புயலால் இலங்கையின் பொருளாதாரம் நெருக்கடியில்!

### சர்வதேச நாணய நிதியம் அறிக்கை

கொழும்பு, டிசெ. 24

**இலங்கை இந்த வருடத்தில் நூற்றுக்கு 4.2 வீதம் என்ற அடிப்படையில் குறிப்பிடத்தக்களவு பொருளாதார வளர்ச்சி வீதத்தை அடையுமென எதிர்பார்க்கப்பட்டாலும் டித்வா புயலால் ஏற்பட்டுள்ள கடும் தாக்கத்தின் காரணமாக நூற்றுக்கு 2.9 வீத மந்த கதியான பொருளாதார வளர்ச்சி வேகத்தை அடுத்த வருடத்தில் அவதானிக்கக் கூடியதாக இருக்குமென சர்வதேச நாணய நிதியம் வெளியிட்டுள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.**

அதேபோல், நாட்டின் நடைமுறை கணக்கின் இருப்பு அடுத்த 12 மாதங்களில் 720 மில்லியன் அமெரிக்க டொலராக (22,673 இலங்கை ரூபா) அதிகரிக்கலாமென அடிப்படை மதிப்பீடுகளில் உறுதியாகியுள்ளதாக அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அடுத்த வருடத்தில் நாட்டின் சாதாரண பணவீக்கம் நூற்றுக்கு 5.4 சதவீதம் வரையில் உயர்வடையக் கூடுமெனவும் சர்வதேச நாணய நிதியம் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில்-

இலங்கையின் பொருளாதாரத்தை இயல்பு நிலைக்கு கொண்டு வரும் பயணத்தில் டித்வா புயல் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. வெளிகடன் நிலைபேறுதன்மை தொடர்பில் அபாயநிலை அதிகரித்துள்ளது.

டித்வா புயலினால் நாட்டின் பொருளாதாரத்துக்கு ஓரளவு பாதிப்பு ஏற்படும் என்றாலும் அந்தப் பாதிப்பின் தன்மையை தற்போது வரையில் உறுதியற்ற தன்மையை கொண்டுள்ளது. மாற்றமடையும் சிறு அபிவிருத்தி தேவைகள், தற்போதுவரையில் நிறைவு செய்யப்படாமலிருக்கும் பாதிப்பு மதிப்பீடு மற்றும் கொள்கை பிரசாரத்தை வெளியிடுவதற்கான காலம் என்பனவும் அந்த உறுதியற்ற தன்மைக்கு காரணமாக அமைந்துள்ளன.

சீரற்ற காலநிலையினால் ஏற்பட்ட பேரிடரினால் நாட்டின் விவசாயத்துக்கும் சுற்றுலாத் துறைக்கும் கடும் பாதிப்பு ஏற்படுவதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. நாட்டின் மொத்த தேசிய உற்பத்தியில் நூற்றுக்கு 11 சதவீதம் வரையில் விவசாயம் மற்றும் சுற்றுலாத்துறை ஆகியன பங்களிப்புச் செய்கின்றன. டிட்வா புயலினால் பயிர் நிலங்களுக்கு குறிப்பிடத்தக்களவு பாதிப்பு ஏற்பட்டுள்ளது. மேலும் பெரும் எண்ணிக்கையிலான சுற்றுலாப் பயணிகள் வரும் கால கட்டத்திலேயே இந்த பேரனர்த்தமும் இடம்பெற்றுள்ளது.

வெள்ளப்பெருக்கு மற்றும் மண்சரிவினால் விவசாய நிலங்கள் மற்றும் கால்நடை வளங்கள் குறிப்பிடத்தக்களவு அழிவை சந்தித்துள்ளமையின் காரணமாக உணவு இறக்குமதிக்கான தேவையும் குறிப்பிடத்தக்களவு அதிகரித்துள்ளது. விவசாய ஏற்றுமதிகளும் சிறு வீழ்ச்சியை சந்திக்கலாம்.

எவ்வாறாயினும், அவ்விரு துறைகளும் பொருளாதார வளர்ச்சியில் பாதிப்பை ஏற்படுத்தினாலும் நிர்மாணத் துறையினால் மந்த கதியான பொருளாதார வளர்ச்சி வேகத்துக்கு தாக்கம் ஏற்படும்.

பேரிடரால் ஏற்பட்ட இழப்புகளை மதிப்பீடு செய்ய குறிப்பிடத்தக்களவு காலம் செல்லும் என்றாலும் வரலாற்றில் இடம்பெற்ற இது போன்ற பேரிடர்களினால் தேசிய உற்பத்தியில் நூற்றுக்கு 2.5-5 வீதத்துக்கு இழப்புகள் நிகழ்ந்துள்ளன. அழிவுக்குள்ளான கட்டடங்கள், வீடு மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகளை புதுப்பிப்பதையும் நிவாரணம் வழங்குவதையும் மேற்குறிப்பிட்டது போன்று சதவீதத்தின் அடிப்படையில் குறிப்பிட முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

நாட்டின் பொருளாதார போக்கு மிகவும் அதிக நிச்சயமற்ற தன்மை உருவாகி வருகிறது. இதனூடாக பொருளாதாரம் மீண்டும் கீழ்நோக்கி செல்லும் ஆபத்து நிலையில் இருக்கின்றமையே இந்த விடயங்கள் வெளிகாட்டுகின்றன-என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

# டித்வா புயலால் ஏற்பட்ட சேதங்களுக்கு மிகவிரைவில் இழப்பீடு வழங்கப்படும்!

முல்லைத்தீவு, டிசெ. 24

டித்வா புயல் வெள்ளத்தால் ஏற்பட்ட சேதங்களுக்கான இழப்பீடுகள் மிகவிரைவாக வழங்கப்படும் என பொதுப் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.

தற்போதைய அனர்த்த நிலைமை தொடர்பான முல்லைத்தீவு மாவட்ட விசேட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் முல்லைத்தீவு மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில், பொதுப் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தலைமையில் நடைபெற்றது.

மாவட்ட அரசாங்க அதிபர் அ.உமாமகேஸ்வரனின் ஒழுங்குபடுத்தலில் இடம்பெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில், மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவரும் கூட்டுறவு இராஜாங்க அமைச்சருமான உபாலி சமரசிங்க, பாராளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், து.ரவிகரன், திலகநாதன், ம.ஜெகதீஸ்வரன் உட்பட வடக்கு மாகாண பிரதம செயலாளர், மாகாண செயலாளர்கள் திணைக்கள தலைவர்கள் அதிகாரிகள், முப்படையினர் உள்ளிட்டவர்கள் கலந்துகொண்டனர். கூட்டத்தில் மாவட்டத்தில் ஏற்பட்ட அனர்த்தத்தின் பின்னரான நிலமைகள் தொடர்பில் ஆராயப்பட்டன.

கூட்ட நிறைவில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அமைச்சர்,

“வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதாரம் மற்றும் அடிப்படை வசதிகளை மிகவிரைவாக மீட்டெடுப்பதற்கான தேவைப்பாடுகள் குறித்து ஆராய்வதற்காக, ஜனாதிபதியின் உத்தரவிற்கு அமைய முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர், பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க ஆகியோரால் இந்த கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது.

இதில் தனிப்பட்ட சேதவிவரங்களுக்கான இழப்பீடுகளை மிகவிரைவாக வழங்குதல், பாடசாலை மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களுக்கான கொடுப்பனவுகள், விவசாய கால்நடைகளுக்கான இழப்பீட்டு கொடுப்பனவுகளை மிக விரைவாக வழங்குதல் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது-என்றார். (அ)

## கொழும்பில் பலத்த பாதுகாப்பு

கொழும்பு, டிசெ. 24

நுகேகொடை-கொஹுவல பகுதியில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தை அடுத்து கொழும்பு முழுவதும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

நேற்று முன் தினம் இரவு 8:30 மணியளவில் மோட்டார் சைக்கிளில் வந்த அடையாளம் தெரியாத துப்பாக்கிதாரி ஒருவர் துப்பாக்கிச் சூடு நடத்தியதில் 25 வயதுடைய ஒருவர் காயமடைந்ததாக பொலிஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நுகேகொடை சந்தியில் இருந்து கொஹுவல நோக்கி சென்ற முச்சக்கரவண்டி ஒன்றில் பயணித்தவர்களை இலக்கு வைத்தே, இந்த துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது.

காயமடைந்தவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில், முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக கொழும்பு நகரம் முழுவதும் கூடுதல் பொலிஸ் குழுக்கள் நிறுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், துப்பாக்கிச் சூடு நடத்திவிட்டு தப்பிச் சென்றதாக நம்பப்படும் சந்தேக நபரைக் கண்டுபிடிக்க சிறப்புத் தேடுதல் நடவடிக்கைகள் நடைபெற்று வருகின்றன.

இந்நிலையில், பொது மக்கள் மிகவும் விழிப்புடன் இருக்க வேண்டும் என அதிகாரிகள் அறிவுறுத்தியுள்ளனர்.

## நாடு முழுவதும் சோதனை நடவடிக்கைகள்
## 2,300 சுகாதார பரிசோதகர்கள் கடமையில்!

கொழும்பு, டிசெ. 24

பண்டிகைக் காலம் நெருங்கி வரும் நிலையில் சுமார் 2,300 பொது சுகாதார பரிசோதகர்கள் நாடு முழுவதும் சோதனை நடவடிக்கைளை முன்னெடுத்துள்ளனர்.

நுகர்வோருக்கு பாதுகாப்பான மற்றும் தரமான உணவு கிடைப்பதை உறுதி செய்வதற்காக இந்த சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அண்மையில் பெய்த பலத்த மழையை கருத்திற் கொண்டு இந்த விசேட சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மனித நுகர்வுக்கு தகுதியற்ற உணவுப் பொருட்களை விற்பனை செய்யும் வணிகர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பொதுமக்கள் பொருட்களின் விலை, காலாவதி திகதி, உற்பத்தி திகதி, நிறம் மற்றும் உணவுப் பொருட்களின் தரம் தொடர்பில் அவதானத்துடன் செயற்படுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். (அ)

# 2025 உயர்தரப் பரீட்சை எழுதும் மாணவர்கள் இடரால் பாதிப்புற்றிருந்தால் மாற்று ஏற்பாடு

கொழும்பு, டிசெ. 24

2025 ஆண்டு கல்வி பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையின் ஒத்திவைக்கப்பட்ட பாடங்களுக்குத் தோற்றவுள்ள மாணவர்களின் முகவரிகளில், அனர்த்தங்கள் காரணமாக மாற்றங்கள் ஏற்பட்டிருந்தால், உடனடியாக அதிகாரிகளுக்கு அறியப்படுத்துமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அதன்படி, 011 2784537 அல்லது 011 2788616 என்ற தொலைபேசி இலக்கங்களினூடாக தகவல்களை அறியப்படுத்த முடியும் என பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் இந்திகா குமாரி தெரிவித்துள்ளார்.

அனர்த்தங்களினால் வசிப்பிடத்தில் ஏற்பட்ட மாற்றம் காரணமாக, முன்னர் ஒதுக்கப்பட்ட பரீட்சை மத்திய நிலையங்களுக்குச் செல்ல முடியாத பரீட்சார்த்திகள், முன்கூட்டியே பரீட்சைகள் திணைக்களத்திற்கோ அல்லது பாடசாலை அதிபருக்கோ அறியப்படுத்தவேண்டும் என அவர் வலியுறுத்தியுள்ளார்.

அவ்வாறான பரீட்சார்த்திகளுக்கு மாற்றுப் பரீட்சை மத்திய நிலையங்கள் ஒழுங்கு செய்யப்படவுள்ளன.

அத்துடன், பேரிடர் காரணமாக விண்ணப்பதாரர்களின் அனுமதி அட்டைகள் அல்லது தேசிய அடையாள அட்டைகள் சேதமடைந்தாலோ அல்லது அழிக்கப்பட்டிருந்தாலோ, அந்த விடயங்கள் தொடர்பிலும் உடனடியாக அறிவித்துத் தேவையான உதவிகளைப் பெற்றுக் கொள்ளுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினால் 24.12.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.